**பிரிவு 168. கேள்விகளைக் கேட்க அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட நீதிபதியின் அதிகாரம் (Judge’s power to put questions or order production)**

தொடர்புடைய பொருண்மைகளைக் கண்டறிய அல்லது சரியான ஆதாரத்தைப் பெறுவதற்காக, நீதிபதி,

- தேவைப்படும் எந்தவொரு கேள்வியையும், எந்த வடிவத்திலும், எந்த நேரத்திலும், எந்த சாட்சியிடமோ அல்லது தரப்பினரிடமோ எந்தவொரு பொருண்மையையும் பற்றி கேட்கலாம்.
- எந்தவொரு ஆவணத்தையும் அல்லது பொருளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடலாம்.

அத்தகைய எந்தவொரு கேள்விக்கும் அல்லது உத்தரவுக்கும் எந்தவொரு ஆட்சேபனையும் தெரிவிக்க கட்சிகளுக்கோ அல்லது அவர்களின் சார்பாளர்களுக்கோ (their representatives) உரிமை கிடையாது, அல்லது

- நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல், அத்தகைய எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்கும் எந்தவொரு பதிலின் மீதும், எந்தவொரு சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்ய முடியாது.

வரம்புரை: இந்தச் சட்டத்தால் தொடர்புடையது என அறிவிக்கப்பட்ட, முறையாக நிரூபிக்கப்பட்ட பொருண்மைகளின் அடிப்படையில் தீர்ப்பு இருக்க வேண்டும்.

வரம்புரை: எதிர் தரப்பினரால் கேள்வி கேட்கப்பட்டால் அல்லது ஆவணம் அழைக்கப்பட்டால், அத்தகைய சாட்சிக்கு 127 முதல் 136 வரை பிரிவுகளின் கீழ் பதிலளிக்கவோ அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மறுக்கவோ உரிமை உள்ள எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்க அல்லது எந்தவொரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சாட்சியைக் கட்டாயப்படுத்த எந்தவொரு நீதிபதியையும் இந்த பிரிவு அங்கீகரிக்காது.

பிரிவு 151 அல்லது 152 இன் கீழ், வேறு எந்த நபரும் கேட்பது முறையற்றதாக இருக்கும் எந்த கேள்வியையும் நீதிபதி கேட்க கூடாது.

இதற்கு முன் இச்சட்டத்தில் விலக்களிக்கப்பட்டதைத் தவிர, எந்தவொரு ஆவணத்தின் முதன்மை சான்றுகளையும் நீதிபதி தவிர்க்கக் கூடாது.

**சட்டங்களின் ஒப்பீடு**

இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 165 சில மாற்றங்களுடன், இச்சட்டத்தில் பிரிவு 168 எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய சாட்சியச் சட்டத்தில், நீதிபதி விரும்பும் எந்தவொரு கேள்வியையும் (any question he pleases) கேட்கலாம் என நீதிபதிக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. இந்தச் சட்டத்தில், நீதிபதி தேவை எனக் கருதும் கேள்விகளைக் (considers necessary) கேட்கலாம் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆட்சேபனை தெரிவிக்க கட்சிகளுக்கோ அல்லது அவர்களின் முகவர்களுக்கோ உரிமை இல்லை எனக் கூறப்பட்டு இருந்தது. இந்தச் சட்டத்தில், முகவர் என்பதற்குப் பதிலாக "சார்பாளர்களுக்கோ (their representatives) என குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும், இந்திய சாட்சியச் சட்டம் 1872, தொடர்புடைய அல்லது பொருத்தமற்ற எந்தவொரு பொருண்மையையும் பற்றி கேட்கலாம் எனக் கொடுக்கப்பட்ட உரிமை மாற்றப்பட்டு, பொருண்மை தொடர்பாக தேவை எனக் கருதும் கேள்விகளைக் கேட்கலாம் எனக் கூறுகின்றது.

இந்த மாற்றங்களின் வழி நீதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த விருப்பப்படி கேள்வி கேட்கும் உரிமை (ask any question he pleases) மற்றும், பொருத்தமற்ற எந்தவொரு பொருண்மையையும் (any fact relevant or irrelevant) குறித்து கேட்கும் உரிமை இப்போது வழங்கப்படவில்லை.

மேலும், கேள்விகளை எழுப்ப சான்றாயம் அல்லது தீர்ப்புதவியாளர்களின் அதிகாரம் (Power of Jury or Assessors to put questions), இப்போது பொருத்தமில்லாதது என்பதனால், இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 166 நீக்கப்பட்டுள்ளது .

**சட்டப் பிரிவு என்ன சொல்கின்றது**

பிரிவு 168, நீதிபதிக்கு கேள்விகளைக் கேட்க அல்லது ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட பரந்த அதிகாரங்களை அளிக்கின்றது.

ஒரு விசாரணை நீதிபதி, சாட்சிகளால் கூறப்பட்டதை பதிவு செய்ய "பதிவு செய்யும் கருவி" போல செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. சான்றுகள் சேகரிக்கும் செயல்பாட்டில் பங்கு வகிப்பதன் மூலம் தேவையான அனைத்து சான்றுகளையும் நீதிமன்றம் பெற வேண்டும். இந்த நோக்கத்திற்காக, சட்டம் நீதிபதிக்கு பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இது தவிர, பாரதிய மக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023, பிரிவு 348 (முக்கிய சாட்சியை வரவழைக்க அல்லது ஆஜரான நபரை ஆராயும் அதிகாரம்), மற்றும் உரிமையியல் நடைமுறைக் குறியீடு (கட்டளை X , விதிகள் 2 & 4, ஆணை XVL , விதி 14) நீதிபதிக்கு அதிகாரங்களை வழங்குகின்றன.

பிரிவு 165 இன் முதல் பகுதி கூறுவது:

- நீதிபதி தேவை என்று கருதும் (he considers necessary) எந்தவொரு கேள்வியையும்,
- எந்த வடிவத்திலும், எந்த நேரத்திலும்,
- எந்த சாட்சியிடமோ அல்லது தரப்பினரிடமோ,
- எந்தவொரு பொருண்மையையும் பற்றி (about any fact) கேட்கலாம்.
- எந்தவொரு ஆவணத்தையும் அல்லது பொருளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடலாம்.

அத்தகைய எந்தவொரு கேள்விக்கும் அல்லது உத்தரவுக்கும் எந்தவொரு ஆட்சேபனையும் தெரிவிக்க, கட்சிகளுக்கோ அல்லது சார்பாளர்களுக்கோ (their representatives) உரிமை கிடையாது.

நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல், அத்தகைய எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்கும் எந்தவொரு பதிலின் மீதும், எந்தவொரு சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்ய முடியாது.

பிரிவின் இரண்டாம் பகுதி, முறையாக நிரூபிக்கப்பட்ட சட்டத்தால் தொடர்புடையதாக அறிவிக்கப்பட்ட பொருண்மைகளின் அடிப்படையில் தீர்ப்பு இருக்க வேண்டும் என்றும் கட்டளையிடுகின்றது.

கடைசி பகுதி, நீதிபதிக்கு வழங்கப்பட்ட மிக பரந்த அதிகாரங்களுக்கு மூன்று விதிவிலக்குகளை அளிக்கின்றது.

எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்க அல்லது எந்தவொரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய, எந்தவொரு சாட்சியையும் கட்டாயப்படுத்துவதில் இருந்து நீதிபதியை இந்த பிரிவு கட்டுப்படுத்துகின்றது.

i. எதிர் தரப்பினரால் கேள்வி கேட்கப்பட்டால் அல்லது ஆவணம் அழைக்கப்பட்டால், அத்தகைய சாட்சிக்கு 127 முதல் 136 வரை உள்ள பிரிவுகளின் கீழ் பதிலளிக்கவோ, அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மறுக்கவோ, உரிமை உள்ள எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்க அல்லது எந்தவொரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சாட்சியைக் கட்டாயப்படுத்த, எந்தவொரு நீதிபதியையும் இந்த பிரிவு அங்கீகரிக்கவில்லை.
ii. பிரிவு 151 அல்லது பிரிவு 152- ன் கீழ் வேறு எந்த நபரும் கேட்பது முறையற்றதாக இருக்கும் எந்தவொரு கேள்வியையும் நீதிபதி கேட்கக் கூடாது. உதாரணமாக, வழக்கு சம்பந்தமில்லாத ஒரு விஷயம் தொடர்பான கேள்வி அல்லது நியாயமான காரணங்கள் இல்லாமல் உள்ள கேள்வி.
*iii.* மேலும், சட்டத்தின் விதிகளுக்குட்பட்ட விலக்குகள் தவிர, வேறு எந்தவொரு ஆவணத்தின் முதன்மை ஆதாரங்களையும் நீதிபதி தவிர்க்க கூடாது.

***முன்னா பாண்டே எதிர் பீகார் மாநிலம் (Munna Pandey v. State of Bihar; 2023 LiveLaw (SC) 744)*** *என்ற வழக்கில், நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரத்தின் முக்கியத்துவம் குறித்து, உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது:*

- *பல சூழ்நிலைகளில் மௌனம் நன்றாக இருக்கலாம், ஆனால் விசாரணையின் போது நீதிபதி வாய்மூடி மௌனியாக இருப்பது சிறந்த சூழ்நிலை அல்ல.*
- *ஒரு அமைதியான நீதிபதி, பொதுமக்கள் மனதில் சிறந்த மாதிரியாக இருக்கலாம். ஆனால் விசாரணையின் போது அவர் சுறுசுறுப்பாக மாறுவதில் எந்தத் தவறும் இல்லை, இதனால் குற்றவியல் நடவடிக்கையில் நீதி வழங்க முடியும். குற்றவியல் விசாரணை என்பது நீதிபதி ஒரு பார்வையாளராக அல்லது பந்தயத்தில் யார் வென்றார் என்பதை இறுதியாக முடிவு செய்யும் நடுவராக செயல்படும், இரண்டு போட்டியாளர்களுக்கு இடையேயான சண்டையாக மாறக் கூடாது.*
- *ஒரு நீதிபதி விசாரணையில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. சரியான முடிவை அடைவதற்குத் தேவையானதாக அவர் கருதும் பொருத்தமான சூழலில் சாட்சிகளிடமிருந்து தேவையான விஷயங்களைப் பெற வேண்டும். முதன்மை விசாரணையின் போது அல்லது குறுக்கு விசாரணையின் போது அல்லது உண்மையை வெளிக்கொணர மறுவிசாரணையின் போது சாட்சிகளிடம் கேள்விகளை எழுப்பும் அவரது அதிகாரத்திற்கு தடையாக எதுவும் இல்லை. அதன் தொடர்ச்சி என்னவென்றால், ஒரு சாட்சி தவறிழைத்ததாகவோ அல்லது பதில் நழுவிவிட்டதாகவோ (error or a slip) ஒரு நீதிபதி உணர்ந்தால், அது அப்படியா என்பதை உறுதிப்படுத்த வேண்டியது நீதிபதியின் கடமை.*

- *ஏனெனில், தவறு செய்வது மனிதச் செயல். மற்றும் குறுக்கு பரிசோதனையின் போது பதட்டம் மற்றும் அழுத்தத்தின் கீழ் தவறு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம். குற்றவியல் நீதி என்பது சாட்சியங்கள் சேகரிக்கும் செயல்பாட்டின் போது சாட்சிகளால் எழுதப்பட்ட தவறான பதில்களின் அடிப்படையில் அமைந்திருக்கக் கூடாது. விசாரணை நீதிபதி சுறுசுறுப்பாகவும் விழிப்புடனும் இருக்க இது ஒரு பயனுள்ள செயலாகும். இதனால் பிழைகள் குறைக்கப்படும்.*